<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை – தமிழ் நாட்டில் ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – விதிகள் தளர்வு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை

அரசாணை (நிலை) எண்133 நாள் 24.05.2012:
திருவள்ளுவர் ஆண்டு 2043,
வைகாசி 11 நாள்
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.147 செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த் துறை, நாள் 03.04.1986.
2. அரசாணை (நிலை) எண்.489, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 06.11.1986.
3. அரசாணை (நிலை) எண்.91, செய்தி மற்றும் சுற்றுலா(செ.வெ)த் துறை, நாள் 2.3.1989.
4 அரசாணை (நிலை) எண்.94, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 30.03.1992
5 அரசாணை (நிலை) எண்.139, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 01.08.1996.
6 அரசாணை (நிலை) எண்.98, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 17.4.1997
7 அரசாணை (நிலை) எண்.84, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 28.4.1999
8 அரசாணை (நிலை) எண்.79, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள்11.4.2000
9 அரசாணை (நிலை) எண்.151, செய்தி மற்றும் சுற்றுலா (செ.வெ)த் துறை, நாள் 13.07.2000
10 அரசாணை (நிலை) எண்.303, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 22.07.2010.

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பத்திரிகைத் துறையில் நீண்டகாலமாக பணியாற்றி, சமுதாய விழிப்புணர்விற்கு பாடுபட்டு, பணியிலிருந்து ஓய்வு பெற்று, வறுமை நிலையில் உள்ள பத்திரிகையாளர்களின் சமூகப் பணியைக் கருத்தில் கொண்டு நலிவடைந்த பத்திரிகையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க பல்வேறு விதிகள் வகுக்கப்பட்டு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 14.04.1986 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

த.பி.பா.,

2) மேலே இரண்டு முதல் எட்டு வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் பத்திரிகையாளர் ஓய்வூதியத் தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டதுடன், ஓய்வூதியம் பெறுவதற்கான விதிமுறைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன.

3) மேலே ஒன்பதாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பத்திரிகையாளர் ஓய்வூதியம் கோரி விண்ணப்பம் செய்பவர், விண்ணப்பம் அளிக்கும்போது எல்லாவிதத்திலும் (ஓய்வூதியம் உட்பட்டு இதர வகைகளில் பயனாளிகள் பெறுபவை) குடும்பத்தின் ஆண்டு வருமான தொகையை ரூ.20,000/–க்குள் இருக்க வேண்டும் எனவும், விண்ணப்பம் செய்பவர் பணிக்கொடை (கிராஜுவிடி) மற்றும் ஓய்வூதியம் மூலமாக முன்னர் பணிபுரிந்த நிறுவனங்களிடமிருந்து பெறும் தொகை ஆண்டொன்றுக்கு ரூபாய் 30,000/–க்குள் இருக்க வேண்டும் எனவும், விண்ணப்பம் செய்பவர் பணியிலிருந்தபோது, எந்த ஒரு குறிப்பிட்ட ஆண்டின் மொத்த வருமானம் ரூ.50,000/– மேல் பெற்றிருக்க கூடாது என விதிமுறைகளில் திருத்தங்கள் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டு 01.04.2000 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

4) மேலே படிக்கப்பட்ட அரசாணை 10ல் கீழ்கண்டவாறு தகுதிகள் இருக்க வேண்டும் என மறு நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது :

1. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் முழுநேர பணியாற்றி ஓய்வு பெற்றிருத்தல் வேண்டும்
2. பணியிலிருக்கும் பொழுது பெற்ற அதிகபட்ச ஆண்டு வருமானம் ரூ.1,20,000/–க்குள் இருத்தல் வேண்டும்
3. பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் பெற்ற பணிக்கொடை ரூ.1,00,000/–க்குள் இருத்தல் வேண்டும்.
4. ஓய்வு பெற்ற பின்னர் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பொழுது கிடைக்கப் பெறும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/–க்குள் இருத்தல் வேண்டும்.

5. மேற்கூறிய விதிகள் சற்று கடினமாக (Rigid) உள்ளதென்றும், இதனால் பல ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெற இயலாத நிலை உள்ளதென்றும், எனவே விதிகளை சற்று தளர்த்த வேண்டுமென்றும், அவ்வப்போது ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகையாளர் நலச் சங்கங்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தன. இதனை கவனமாக பரிசீலித்த அரசு, மக்கள் நலப்பணியில் ஈடுபட்ட பின்னர், ஓய்வு பெற்று, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு உதவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் விதிகளை சற்று தளர்த்த முடிவு செய்துள்ளது. விதிகள் தளர்த்துவது குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 26.03.2012 அன்று சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையில் :-

“பத்திரிகைத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் அதிக எண்ணிக்கையில் ஓய்வூதியம் பெறும் வகையில், அவர்களின் பணிக்கொடை உச்சவரம்பு தகுதி ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் எனவும், மேலும், பணியிலிருந்து ஓய்வு பெறும்பொழுது ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்பு தகுதி 1.20 இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்” என்று அறிவித்துள்ளார்.

த.பி.பா.,

**6.** மேலே பத்தி 5ல், 26.3.2012 அன்று சட்டமன்றபேரவையில் சமர்ப்பித்துள்ள நிதி நிலை அறிக்கையின்படி, மேலே பத்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி எண் 5ல் துணைப்பத்திகள் (2) மற்றும் (3) ல் நிர்ணயிக்கப்பட்ட பணிக்கொடை மற்றும் ஆண்டு வருமான உச்ச வரம்பை கீழ்க் குறித்தவாறு நிர்ணயித்து ஆணையிடப்படுகிறது.

அ) பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் மனுதாரர் பெற்ற பணிக்கொடை ரூ.1,00,000/–லிருந்து ரூ.2,00,000/– ஆக உயர்த்தப்படுகிறது.

ஆ) பணியிலிருந்தபோது மனுதாரர் பெற்ற அதிகபட்சம் ஆண்டு வருமானம் ரூ.1,20,000/–லிருந்து ரூ.2,00,000/– ஆக உயர்த்தப்படுகிறது.

7) மேற்குறிப்பிட்டவாறு உயர்த்தப்பட்ட பணிக்கொடை மற்றும் ஆண்டு வருமான உச்ச வரம்பு இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வருகிறது.

8) மேலே திருத்தப்பட்ட தகுதிகள் தவிர, பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்க குறித்த இதர தகுதிகள் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்ந்து கடைபிடிக்கப்பட வேண்டும்.

9) இவ்வரசாணை நிதித் துறையின்அ.சா.கு. எண்.27847/நாள்17.05.2012–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
இயக்குநர்/ துணை செயலாளர், செய்தி மக்கள் தொடர்பத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9
மாநில தலைமை கணக்காயர், சென்னை–18

நகல்:
நிதி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி)த் துறை, சென்னை–9
செய்தி ஒலிபரப்பு அமைச்சகம், புதுதில்லி
அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை–9
அனைத்து துறைத் தலைவர்கள், சென்னை–9
அனைத்து செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்
அனைத்து கருவூல அலுவலர்கள்
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (வரவு செலவு/கணக்குத் துறை,
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9/சென்னை–5/ சென்னை–35
தலைவர், சென்னை நிரூபர்கள் சங்கம், சென்னை–2
இயக்குநர், எழுது பொருள் அச்சுத் துறை, சென்னை–2
(தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதற்காக)
இயக்குநர், கருவூல கணக்கு அலுவலகம், சென்னை–35
மாநில தலைமை கணக்காயர், சென்னை–9/சென்னை–5/ சென்னை–35
இ.கோ./உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஓம்/–
பிரிவு அலுவலர்